සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

## இரண்டாம் தவணைப் பரீட்சை - தரம் - 09 - 2024
## Second Term Test - Grade 09 - 2024

## இஸ்லாம்

நேரம்: 2 மணி.

பெயர்/சுட்டெண் :

### பகுதி I

* அறிவுறுத்தல்கள
* எல்லா வினாக்களுக்கும் விடை தருக
* மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக

01. “லப்ளுள் ஜலாலாஹ்” என அழைக்கப்படுவது
    1. சுப்ஹானல்லாஹ் 2. அல்ஹம்து லில்லாஹ 3. அல்லாஹ் 4. அல்லாஹு அக்பர

02. நபிமார்களில் இறுதியானவர் என்பதை குறிக்கும் அரபு பதம்
    1. ஸிபதுன் நபி 2. காத்தமுன் நபிய்யீன 3. ரிஸாலதுன் நபிய்யீன் 4. மஹப்பதுன் நபி

03. ஜனாபத் உடையோர் செய்யமுடியுமான ஒன்று பின்வருவனவற்றில் எது?
    1. தொழுதல் 2. நோன்பு பிடித்தல் 3. ஹஜ் செய்தல் 4. பிரயாணம் செய்தல்

04. முற்படுத்தி சேர்த்து தொழுதல் என்ற கருத்தை தரும் அரபு பதம்
    1. ஜம்உ 2. ஜம்உ த.்.கீர் 3. கஸ்ரு 4. ஜம்உத் தக்தீம்

05. நான் ஜனஸாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று
    1. உறவினருக்கு அறிவித்தல் 2. மூடி மறைத்து வைத்தல்
    3. குளிப்பாட்டுதல் 4. அழுது புலம்புதல்

06. ஸகாத் கடமையை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கக்கூடிய நன்மை அல்லாதது
    1. செல்வம் குறைவடைதல் 2. வறுமை நீங்குதல்
    3. குற்ற செயல்கள் குறைதல் 4. மறுமையில் ஈடேற்றம் கிடைத்தல்

07. ஹஜ் நிகழ்வுகளின் அடையாளமாக காணப்படும் நபியின் குடும்பம
    1. மூஸா (அலை) குடும்பம் 2. முஹம்மது (ஸல்) குடும்பம
    3. இப்ராஹீம் (அலை) குடும்பம 4. நூஹ் (அலை) குடும்பம

08. துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள் அரபாவில் தரித்தல்
    1. ஹஜ்ஜின் அர்கான்களில் ஒன்றாகும்
    2. ஹஜ்ஜின் வாஜிபுகளில் ஒன்றாகும்
    3. ஹஜ்ஜின் ஸுன்னத்துகளில் ஒன்றாகும்
    4. ஹஜ்ஜில் தவிர்த்துகொள்ள வேண்டிய ஒரு அம்சமாகும்

Past Papers Wiki

09. மறுமையில் நான்கு விடயங்களுக்கு பதில் அளிக்காத வரையில் எந்த ஒரு மனிதனாலும் நகர முடியாது என்பதில் உள்ளடங்காத விடயம்
   1. உனது வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்
   2. அறிவை எவ்வாறு பயன்படுத்தினாய்
   3. உனது பெற்றோரை எவ்வாறு கவனித்தாய்
   4. செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து எவ்வாறு பயன்படுத்தினாய்

10. ஒரு முஸ்லிமின் வாழ்வில் இலக்கையே தகர்த்து தோல்விக்கு இட்டுச் செல்வது
   1. படிக்காமல் காலம் கடத்துவது
   2. சம்பாதிக்காது இருப்பது
   3. திருமணம் முடிக்காது இருப்பது
   4. நேரத்தை விரயம் செய்வது

11. மஸ்ஜித்களில் பேணி நடக்க வேண்டிய ஒழுக்கங்கள் அழைக்கப்படுவது
   1. தஹிய்யதுல் மஸ்ஜித
   2. ஆதாபுல் மஸ்ஜித்
   3. இமாரதுல் மஸ்ஜித்
   4. இமாமதுல் மஸ்ஜித்

12. இறைவா எனக்கு நீ உனது கருணையின் வாசலை திறந்து தருவாயாக எனும் பிரார்த்தனையின் அரபு பதம்
   1. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின்பழ்லிக
   2. ரப்பி ஸித்னீ இல்மா
   3. அல்லாஹும்மப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக
   4. அல்லாஹும்மர்ஹம்னீ

13. தவறிழைத்தவர்களில் சிறந்தவர்கள் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளவர்கள்
   1. தொடர்ந்து தவறு செய்பவர்கள்
   2. விட்டுவிட்டு தவறு செய்பவர்கள்
   3. தவறு செய்யாதவர்கள்
   4. தவறிழைத்து விட்டு மன்னிப்பு கோரக்கூடியவர்கள

14. பாவமன்னிப்பு கோருதல், பாவ மீட்சி பெறுவது என்பதனை குறிக்கும் இரு அரபு பதங்கள்
   1. பர்ளு, சுன்னத
   2. தவ்பா, இஸ்தி∴பார்
   3. துஆ, ஸலவாத்து
   4. தஸ்பீஹ், தஹ்லீல்

15. நல்லடியார்கள் அதிகாலைப் பொழுதில் பாவமன்னிப்பு தேடுவார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுவது
   1. தஹஜ்ஜுத் நேரம்
   2. வெள்ளிக் கிழமை தினம
   3. அரபாவுடைய நாள்
   4. ரமழான் மாதம்

16. "இக்ர∴" எனும் அரபுச் சொல்லின் பொருள்
   1. பிராத்திபபீராக
   2. புகழ்வீராக
   3. ஓதுவீராக
   4. தொழுவீராக

17. ஹிராக் குகையில் ஒளி வடிவில் தோன்றி நபி (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆனை கற்றுக் கொடுத்தவர்
   1. இஸ்ராயில் (அலை)
   2. முனகர் (அலை)
   3. ரகீப் (அலை)
   4. ஜிப்ரீல் (அலை)

18. வஹியை எழுதுவோர் என்பதனை குறிப்பிடும் சொல்
   1. குத்தாபுல் வஹீ
   2. ஹாபிழுல் வஹீ
   3. காரிஉல் வஹீ
   4. நாஸிதுல் வஹீ

19. அல்குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் பிளவு படாமல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது.
   1. அபூபக்கர் (ரலி)
   2. உதுமான் (ரலி)
   3. ஸைத் இப்னு ஸாபித் (ரலி)
   4. ஹுதைபா அல் யமானி (ரலி)

20. எதிரிகளின் விமர்சனங்கள் கேலி பேச்சுகள் என்பவற்றால் நபி (ஸல்) அவர்கள் சோர்வுற்றிருந்த சந்தர்ப்பத்தில் அருளப்பட்ட அல்குர்ஆன் ஸூரா
   1. ஸூரதுல் அல்கத்ர்
   2. ஸூரதுல் ழுஹா
   3. ஸூரதுல் பாதிஹா
   4. ஸூரதுல் இக்லாஸ்

21. ஹதீஸ் துறை உச்ச வளர்ச்சியை கண்ட காலமாக கருதப்படும் காலப்பிரிவு
    1. நபி (ஸல்) காலம் 2. ஸஹாபாக்கள் காலம்
    3. தாபிஈன்கள் காலம் 4. தப உத்தாபிஈன்கள் காலம்

22. பிரபலமான ஆறு ஹதீஸ் கிரந்தங்களும் அழைக்கப்படுவது
    1. முஸ்னத் 2. முஸன்னப் 3. ஸிஹாஹுதுஸ் ஸித்தா 4. ஜாமில

23. இமாம் அபூ அப்பதில்லாஹ் முஹம்மது இஸ்மாயில் அல்புஹாரி அவர்கள் பிரபலமான துறையாக கருதப்படுவது
    1. ஹதீஸ் துறை 2. பிக்ஹுத்துறை 3. தப்ஸீர் துறை 4. மருத்துவத்துறை

24. நபி (ஸல்) அவர்களின் வாழ்வின் கடைசி காலகட்டத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வு ஒன்றாக கருதப்படுவது
    1. அல்குர்ஆன் இறக்கி அருளப்பட்டமை
    2. தொழுகை கடமையாக்கப்பட்டமை
    3. மதீனாவுக்கு ஹிஜ்ரத் பயணம் செய்தமை
    4. ஹஜ்ஜத்துல் விதாப்ப எனும் பிரியாவிடைக்குரிய ஹஜ்ஜை நிறைவேற்றியமை

25. நபி (ஸல்) அவர்கள் மீது வைக்கப்படும் அன்பு அழைக்கப்படுவது
    1. ஸலவாதுர் ரஸூல் 2. இத்திபாஉர்ரஸூல் 3. மஹப்பதுர் ரஸூல் 4. ஈமானுர் ரஸூல்

* **26 முதல் 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

(உயிரை விடவும், இணை வைப்பு, யவ் முத்தர்வியா, முத்தப்பகுன் அலைஹி, ஜாமிஉல் குர்ஆன், யவ்முல் ஜீம்ஆ, யவ்முஅரபா )

26. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் சிறப்பு பெயர் ........................................... ஆகும்

27. ........................................... என எட்டாம் நாள் அழைக்கப்படும்

28. நாம் எமது ........................................... அதிகமாக முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும்

29. ........................................... எனும் இழிவிலிருந்து நீங்கி அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிபணிந்து வாழ வேண்டும்

30. துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் நாள் ........................................... என அழைக்கப்படும்

* **31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (x) பிழை எனவும் அடையாளமிடுக.**

31. நபி (ஸல்) அவர்களை நேசிப்பது முழு உம்மத்துக்கும் உள்ள கடமையாகும் (   )

32. வட்டியுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களை முற்றாக தவித்துக் கொள்ள வேண்டியதில்லை (   )

33. ஸுனன் நஸாஈ எனும் ஹதீஸ் தொகுப்பு ஸுனன் அர்பஆ என்பதில் ஒன்றாகும் (   )

34. இறைவன் தந்த பேரருள்களுக்கு நன்றி கடனை முழுமையாக செலுத்த வேண்டியது இல்லை (   )

35. யமாமா யுத்தத்தில் அல்குர்ஆனை மனனம் செய்திருந்த சுமார் 70 ஸஹாபாக்கள் ஷஹீதாகினர் (   )

* 36 முதல் 40 வரையான வினாக்களுக்கு பகுதி A இலிருந்து பொருத்தமான கூற்றை தெரிவு செய்து பகுதி B யுடன் இணைக்குக

| | A | B |
|---|---|---|
| | | |
| 36. | ஹஜ்ஜையும் உம்றாவையும் அல்லாஹ்வுக்காக பூர்த்தி செய்யுங்கள் | மஸ்ஜித் |
| 37. | முஸ்லிம்களின் வாழ்வோடு என்றும் பின்னிப்பிணைந்த இடம் | இமாம் சுஸ்ஸாலி |
| 38. | நீ தவ்பா செய்கிறாய் அந்ததப்பாவை முறித்துக் கொள்கிறாய் | அல்குர் ஆன |
| 39. | அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு | ழுஹா |
| 40. | முற்பகல் | தர்தீபுத்திலாவத் |
| | | முஸ்ஹப் |
| | | அஹ்துல் பைத் |



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

## பகுதி II

*** முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றிலிருந்து எவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. சுருக்கமாக விடை தருக

1. மக்காவில் இருந்து ஊருக்கோ, மதீனாவுக்கோ செல்லும் முன் நிறைவேற்றும் தவாப் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
2. ஆடுகளுக்குரிய ஆரம்ப நிஸாப் அளவு எத்தனை ஆடுகள்
3. ஜனஸாத் தொழுகையில் முதல் தக்பீரின் பின் ஓத வேண்டியது யாது
4. துல்ஹஜ்மாதம் 11, 12, 13ம் நாட்கள் எவ்வாறு அழைக்கப்படும்
5. முதுமைக்கு முன்னர் நாம் எதனை பயன்படுத்த வேண்டும்
6. மஸ்ஜித்தில் நுழைந்ததும் தொழ வேண்டிய காந்தை தொழுகை யாது
7. அல்குர்ஆன் எந்த கோத்திரத்தின் மொழி வழக்கில் அருளப்பட்டது
8. பத்ஹுசல் பாரி என்பது எந்த ஹதீஸ் கிரந்தத்திற்கு விளக்கமாக எழுதப்பட்ட நூலாகும்
9. அல் இப்ராத் என்பது யாது
10. எனது உயிரை விடவும் எனது பிள்ளைகளை விட எனது சொத்துக்களை விடவும் நீங்களே எனது நேசத்திற்குரியவர் என குறிப்பிட்டவர் யார்? குறிப்பிடப்பட்டவர் யார்

02.
1. ஸகாத் பெற தகுதியுடைய இரு கூட்டத்தினரை குறிப்பிடுக
2. ஹஜ் கடமையை நிறைவேற்றும் முறைகள் மூன்றினையும் குறிப்பிடுக
3. ஹஜ்ஜுக்காக இஹ்ராம் தரித்த ஒருவர் தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் ஐந்து தருக

03.
1. நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் அல்குர்ஆன் வசனம் ஒன்றை குறிப்பிடுக
2. ஐந்து விடயங்களுக்கு முன் ஐந்து விடயங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என குறிப்பிடப்படுபவற்றில் மூன்றினை தருக
3. நேரத்தை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடைவதற்கு நாம் கவனம் செலுத்த வேண்டிய ஐந்து விடயங்களை குறிப்பிடுக

04.
1. மஸ்ஜீத்களின் சிறப்பை எடுத்துக்காட்டும் ஹதீஸ் ஒன்றினை குறிப்பிடுக
2. பாவமன்னிப்பு கோருவதற்கான நிபந்தனைகள் மூன்றைக் குறிப்பிடுக
3. மஸ்ஜித்துடனான தொடர்பை வலுப்படுத்தக் கூடிய செயல்பாடுகள் ஐந்து குறிப்பிடுக

05.
1. நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறைகள் இரண்டினை குறிப்பிடுக
2. ஸீரா முஹா தரும் போதனைகள் மூன்றை குறிப்பிடுக
3. பிரதான ஹதீஸ் கிரந்தங்கள் ஐந்தினை குறிப்பிடுக.

06.
1. ஹதீஸ்களை பாதுகாக்கும்பணி எந்த கலீபாவின் காலத்தில் இடம் பெற்றது
2. ஹஜ்ஜதுல் விதா∴ உரையில் இடம்பெறும் உள்ளடக்கள் மூன்றினை குறிப்பிடுக
3. நபி (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பை நாம் வெளிப்படுத்த இஸ்லாம் கற்றுத் தந்துள்ள வழிமுறைகள் 5 குறிப்பிடுக

WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank